**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

# AA2 பரீட்சை – 2019 யூலை

# (AA22) கிரயக் கணக்கீடும் அறிக்கையிடலும்

இவ்வினாப்பத்திரம் மொத்தமாக 10 வினாக்களை உள்ளடக்கிய 4 பகுதிகளைக் கொண்டுள்ளது. இது கிரயக் கணக்கீட்டுடன் தொடர்புடைய அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றிய அறிவைச் பரீட்சித்துள்ளது. பரீட்சார்த்திகள் சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு கோரப்பட்டிருந்தனர். விடையளிக்கும்போது உபயோகப்படுத்தவேண்டிய வினைச்சொற்களைக் கொண்ட நிரலும் வினாப்பத்திரத்துடன் வழங்கப்பட்டிருந்தது.

10 வினாக்களும் பின்வருமாறு அமைக்கப்பட்டிருந்தன :

**பகுதி A – 20 புள்ளிகள்**

20 புள்ளிகளுக்கான பலவகைப்பட்ட கட்டாய நோக்கச் சோதனை வினாக்கள்

**பகுதி B – 25 புள்ளிகள்**

ஒவ்வொன்றும் 5 புள்ளிகளைக் கொண்ட ஐந்து கட்டாய வினாக்கள்

**பகுதி C – 30 புள்ளிகள்**

ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மூன்று கட்டாய வினாக்கள்

**பகுதி D – 25 புள்ளிகள்**

இரண்டு பகுதிகளை உள்ளடக்கிய ஒரு கட்டாய வினா. **பகுதி (a)** 11 புள்ளிகள், **பகுதி (b)** 14 புள்ளிகள்

## பகுதி A

**வினா இல. 01** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20)

இந்த வினாக்கள் பிரதானமாக கிரயக் கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கணிப்பீடுகள் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்தியிருந்தன. இவ்வினாவில் எட்டு நோக்கச் சோதனை வினாக்கள் இருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்கு ஒதுக்கப்பட்ட 20 புள்ளிகளில் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், பல பரீட்சார்த்திகளால் கிரய நிலையங்களுக்கு இடையில் மேந்தலைக் கிரயத்தைப் பகிர்கின்ற வினா இல. 1.4 இற்கு விடையளிக்க முடியவில்லை. ஒதுக்கீடு செய்வதற்கும் பகிர்ந்தளிப்பதற்குமிடையிலான வேறுபாடு தொடர்பில் பரீட்சார்த்திகளிடம் தெளிவான விளக்கம் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. வினா இல. **1.7** இற்கு அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளிக்கவில்லை. இதற்குக் காரணம் செயன்முறைக் கிரயமிடல், ஒப்பந்தக் கிரயமிடல் மற்றும் வேலைக் கிரயமிடல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிவு குறைவாக இருந்தமையே ஆகும்.

பரீட்சார்த்திகள் கோட்பாட்டு ரீதியான அம்சங்களில் நல்ல புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் தரப்பட்ட விவரணத்திற்கு அதனைப் பிரயோகிப்பதற்கான ஆற்றலையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

**வினா இல. 02** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவின் **பகுதி (a)** ஆனது EOQ இனை கணிப்பிடுமாறு மாணவர்களைக் கேட்டிருந்தது. **பகுதி (b)** ஆனது EOQ மாதிரியின் இரண்டு எடுகோள்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கு விடையளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகளால் ''கட்டளை ஒன்றிற்கான கட்டளையிடற் கிரயமான Co'' இனையும் ''அலகொன்றிற்கான நிறுத்திவைத்தல் கிரயமான Ch'' இனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே அவர்களால் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கு விடையளித்திருந்ததுடன் சரியான எடுகோள்களையும் வழங்கியிருந்தனர்.

எனவே, பரீட்சார்த்திகள் EOQ மாதிரி பற்றியும் சூத்திரம் ஒன்றில் தகவல்களின் பிரயோகம் தொடர்பாகவும் முற்றடக்கமான விளக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 03** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா விற்பனைப் பாதீடு மற்றும் உற்பத்திப் பாதீடு போன்றவற்றைப் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும் **பகுதி (a)** இற்கு, சில பரீட்சார்த்திகள் பாதிடப்பட்ட விற்பனைக்கு ஆரம்ப இருப்பு மற்றும் இறுதி இருப்பு ஆகியவற்றையும்கூட செம்மையாக்கம் செய்திருந்தனர்.

**பகுதி (b)** இற்கு சில பரீட்சார்த்திகள் உற்பத்திப் பாதீட்டைத் தயாரிக்கும்போது மொத்த விற்பனைப் பெறுமதியினை (அலகு விலை x விற்பனை செய்யப்பட்ட அலகுகள்) கருத்தில் எடுத்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகத் திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 04** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா நிதிக் கணக்குகள் மற்றும் கிரயக் கணக்குகளுக்கிடையிலான இலாப இணக்கக் கூற்று தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்காது அல்லது பூரண விடையை அளிக்காது இருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் மொத்தமாக வழங்கப்பட்ட 05 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இலாப இணக்கம் தொடர்பான எண்ணக்கரு பற்றிய சரியான விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. எனவே, இணக்கக் கணக்குகளுக்குப் பதிலாக T கணக்குகளைத் தயாரித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் கணக்கிணக்கத்திற்குப் பதிலாக நிதிக் கணக்குகளின் இலாபம் மற்றும் கிரயக் கணக்குகளின் இலாபம் ஆகியவற்றுக்கிடையிலான கணிதரீதியான வித்தியாசத்தை மாத்திரம் காட்டியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இலாப இணக்கக் கூற்றினைத் தயாரிக்கும்போது (+), (-) போன்றவற்றை கருத்தில் எடுத்திருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

**வினா இல. 05** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா தொகுதிக் கிரயமிடல் தொடர்பில் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குரிய 05 புள்ளிகளையுமே பெற்றிருந்தனர். எவ்வாறாயினும் சில பரீட்சார்த்திகளால் உற்பத்தி மேந்தலைக் கிரயத்தினைச் சரியாகக் கணிப்பிட முடியவில்லை. அவர்கள் மேந்தலைக் கிரயத்தை கருத்திற் கொள்ளாது தொகுதியின் மொத்தக் கிரயத்தைக் கணிப்பிட்டிருந்ததால் அவர்களால் சரியான விடையைப் பெற முடியவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகத் திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 06** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இவ்வினா துண்டு வீத முறைமையைப் பயன்படுத்தி 2 ஊழியர்களினது மொத்தச் சம்பாத்தியத்தைக் கணிப்பிடுவது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகவும் குறைவானதாக இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை. அவர்களில் பலர் இரண்டு ஊழியர்களினதும் உபகாரப் பணத்தினைத் துல்லியமாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. இதனால் அவர்களால் சரியான விடையைப் பெற முடியவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

## <u>பகுதி C</u>

**வினா இல. 07** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினாவின் **பகுதி (a)** ஆனது ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் மேந்தலைகள் ஒதுக்கப்பட்டு பகிரப்படுவதைக் காட்டும் கூற்றினைத் தயாரிப்பது தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது.

**பகுதி (b)** ஆனது ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் நேர் கூலி மணித்தியாலம் ஒன்றுக்கான மேந்தலை உறிஞ்சல் வீதத்தினைக் கணிப்பிடுவது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்து அதிக புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் ஒவ்வொரு கிரய நிலையங்களுக்குமான மேந்தலை ஒதுக்கீட்டின் உள்ளார்ந்த காரணத்தை விளங்கிக் கொள்ளவில்லை. இதனால் அவர்கள் வினாவில் தரப்பட்ட தகவல்களை வெறுமனே எழுதியிருந்தனர்.

எனினும், சேவைப் பிரிவுகளுக்கான மேந்தலைக் கிரயத்தின் பகிர்வானது பெரும்பாலானவர்களால் சரியாகச் செய்யப்பட்டிருந்தது.

எண்ணக்கரு பற்றிய மேலதிக பயிற்சியும் புரிதலும் செயலாற்றுகையை மேம்படுத்த உதவும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகத் திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 08** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினா செயன்முறைக் கணக்கு தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் அதிக புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் செயன்முறைக் கணக்கை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றிய புரிதலைக் கொண்டிருக்கவில்லை. சிலர் "T" கணக்கிற்குப் பதிலாக கூற்று வடிவத்தில் காட்டியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சாதாரண நட்டத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்த போதிலும் சிலர் அசாதாரண நட்டத்தை அடையாளங் கண்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகத் திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 09** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இவ்வினா உறிஞ்சல் கிரயமிடல் முறையின் கீழ் வருமானக் கூற்றைத் தயாரித்தல் மற்றும் விற்பனை விகிதத்திற்கான பங்களிப்பைக் கணிப்பிடுதல் ஆகியவை தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. சிலர் உறிஞ்சல் கிரயமிடல் முறைக்குப் பதிலாக எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்தியிருந்தனர். நிலையான கிரய வீதம் பிழையாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக அலகொன்றிற்கான மொத்தக் கிரயம் பிழையாகப் பெறப்பட்டதால் அவர்களால் இறுதி இருப்புக்கான சரியான பெறுமதியையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் விற்பனை விகிதத்திற்கான பங்களிப்பைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

## பகுதி D

**வினா இல. 10** - (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

இவ்வினா காசுப் பாதீடு மற்றும் முரண் பகுப்பாய்வு ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்கு உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஏனையவர்கள் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**காசுப் பாதீட்டுப் பகுதி:**

சில பரீட்சார்த்திகள் மாதாந்த அடிப்படையிலான வருமதிகள் மற்றும் சென்மதிகளைக் காட்டுவதற்கு உரிய மாதிரி வடிவத்தைப் பயன்படுத்தியிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் வெறுமனே “T” கணக்கினை வரைவு செய்திருந்தனர். பெரும்பாலானவர்கள் கடன் பெறுவனவை காசுப் பெறுவனவாக காசுப் பாதீட்டில் எடுத்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் கடன் கொடுப்பனவை காசுக் கொடுப்பனவாக காசுப் பாதீட்டில் எடுத்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் இது இறுதி வினாவாக இருந்த காரணத்தால் நேரம் போதைமையினால் இதற்கு விடையளித்திருக்கவில்லை. இது நேர முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மையைக் காட்டுகிறது.

**பகுதி B** – முரண்களின் கணிப்பீடு

**முரண்கள் பகுதி:**

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் முரண்கள் பற்றிய அடிப்படை விளக்கத்தைக் கொண்டிருக்க வில்லை. அவர்களில் சிலர் எவ்வித கணிப்பீடுகளும் இன்றி வெறுமனே சூத்திரங்களை எழுதியிருந்தனர். “F” (சாதகமானது) குறியீடு அல்லது “A” (பாதகமானது) குறியீடு சில பரீட்சார்த்திகளால் குறிப்பிடப்படவில்லை. நேர் மூலப்பொருள் பாவனை முரண், நேர் மூலப்பொருள் கிரய முரண் மற்றும் நேர் வினைத்திறன் முரண் ஆகியவற்றின் கணிப்பீடுகளில் மிகக் குறைந்த செயலாற்றல் அவதானிக்கப்பட்டது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதற்கு கவனத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>**

1. வினாப்பத்திரத்தைக் கையிலெடுத்ததும் அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.

2. வினாவைப் பல தடவைகள் வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும்.

3. சுய கற்றல் பாடப் புத்தகத்தை படித்து அதிலுள்ள உதாரணங்களைச் செய்துபார்த்து பயிற்சியெடுப்பதும் முக்கியமானதாகும்.

4. எண்கணித வழுவைத் தவிர்ப்பதற்காக கணிப்பீடுகளை மீளவும் பரிசீலிப்பதுடன் சகல தொடர்புபட்ட கணிப்பீட்டு வேலைகளையும் தெளிவாகக் காட்டவும். நீங்கள் கணிப்பீட்டைச் செய்யும்போது ஏதாவது எடுகோள்களை எடுப்பீர்களாயின் அவற்றையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

5. பரீட்சையின்போது உங்களுடைய நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும். நேர முகாமைத்துவத்தில் ஏற்படும் அசௌகரியத்தைத் தவிர்ப்பதற்காக நேரத்தை வரையறுத்து, அந்நேரத்தினுள் கடந்தகால வினாப்பத்திரங்களைச் செய்துபார்த்து பயிற்சி பெறுதல் வேண்டும்.

6. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், உங்களுடைய வினா இலக்கங்களும் சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

7. கடந்தகால வினாக்களுக்கு விடையளித்துப் பார்ப்பதன் மூலம், பாடம் தொடர்பான அறிவையும் நீங்கள் விடை எழுதும் ஆற்றலையும் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

8. வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல் வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளித்தல் வேண்டும்.

9. ஒவ்வொரு பாடப் பரப்பும் தொடர்பான கோட்பாட்டு ரீதியான விடயங்களை நன்றாகக் கற்றுக்கொள்ளவும். கோட்பாட்டு ரீதியான வினாக்களுக்கு நன்றாக விடையளிக்கவும். இது உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற வழிவகுக்கும்.

10. சித்தியடைதல் என்ற பிரதான எண்ணத்துடன் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -